**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், கொடைக்கானல்**
**சி.சி.எண்.12 / 2022**
**வழக்கு சாட்சி : PW1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலாஜி | ஜாதி | |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | தொழில் | அப்பளம் வியாபாரம் |
| கிராமம் | பண்ணைக்காடு | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 55 |
| தேதி | 01.08.2023 | | |

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)**

முதல் விசாரணை:

நான் தற்போது பண்ணைக்காட்டில் குடியிருந்து வருகிறேன். அப்பளம் வியாபாரம் செய்து வருகிறேன். **ஆஜர் 1-வது எதிரியைத் தெரியும். 2-வது எதிரியை தெரியும்.** கடந்த 22.06.2021-ம் தேதி எனது பையனை எனது வீட்டில் வைத்து சொல்கின்ற பேச்சை கேட்கமாட்டேங்கிறான் என்று குறவன் என்று திட்டிக்கொண்டு இருந்தேன். மதியம் 2.45 மணியளவில் நான் வெளியே சென்றுவிட்டு திரும்பி வந்தபோது எதிரிகள் 1.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்கமாக திட்டிக் கொண்டு இருந்தார். எங்கள் வீட்டு கண்ணாடிகளை உடைத்துவிட்டனர். உன் புருசனை இங்கே வரச்சொல்லு என்று அசிங்க அசிங்கமாக திட்டினார்கள். எனது பையனையும் எனது மனைவி மற்றும் பிள்ளைகளையும் அசிங்கமாக பேசி அடித்தார்கள். நான் 2.45 மணியளவில் வீட்டிற்கு வரும்பொழுது இருசக்கர வாகனத்தில் இருந்து என்னை கீழே தள்ளிவிட்டார்கள். எதற்காக இந்தமாதிரி பன்னுற என்று கேட்டதற்கு என்னை குறவா என்று சொன்னில என்று சொன்னார். அதற்கு நான் உன்னை பார்க்கவில்லை என்றும் எனது பையனை தான் திட்டிக் கொண்டு இருந்தேன் என்று சொன்னேன். சொல்லிக்கொண்டு இருக்கும் பொழுது திரும்பி கல்லைக் கொண்டு எறிந்து என்னை தான் குறவா என்று சொன்ன அதனால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு அருகில் இருந்த பாட்டிலை எடுத்து எனது பின்பக்க மண்டையில் அடித்துவிட்டார். பின்னர் எனக்கு தலையில் இரத்தம் வந்தது. பின்னர் பண்ணைக்காடு அரசு

மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்து எனக்கு தலையில் 4 தையல்கள் போட்டார்கள். பின்னர் தேனி கானாவிலக்கு அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். பின்னர் 23.06.2021-ம் தேதி தாண்டிக்குடி காவல் நிலையம் சென்று நடந்த சம்பத்திற்கு புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். எனது மனைவிக்கு முதல் எதிரி தம்பி ஆவார். 2-வது எதிரி 1வது எதிரியின் மகன். எனது குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். 22.06.2021-ம் தேதி காலையில் யாரை திட்டினேன் என்றால் எனது மகனை திட்டினேன். உனது வீட்டில் வைத்து திட்டினேன் என்றால் சரிதான். எதிரிகள் எதற்காக என்னிடம் சண்டைக்கு வந்தார்கள் என்றால் எதிரிகள் அருகில் உள்ள கட்டிடத்தில் வேலை பார்க்க சென்றுள்ளார்கள். அப்போது நான் எனது மகனை திட்டிக்கொண்டு இருந்தேன். அவர்கள் தங்களை தான் திட்டினார் என்று என்னுடம் மதியம் 02.45 மணிக்கு என்னுடன் சண்டை போட்டார்கள். என்னை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் என் வீட்டு முன்னாலேயே எதிரிகள் உட்கார்ந்து இருந்தார்கள். என்னுடைய வீட்டுகாரியிடம் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள். நான் எங்கு சென்று வந்தேன் என்றால் ஒரு விசேசவீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்தேன். அப்போது நான் மதுஅருந்தியிருந்தேனா என்றால் மது அருந்தவில்லை. நான் வந்தவுடனே பைக்கை தள்ளிவிட்டதாக நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம். உடனே எழுந்து ஏன் என்னுடன் சண்டை போட்டீர்கள் என்று கேட்டதற்கு நீ எங்களை தான் குறவா என்று திட்டின என்று சொல்லி சண்டை இழுத்தார்களா என்றால் சரிதான். சம்பவம் எங்கே நடந்தது என்றால் எனது வீட்டிற்கு முன் உள்ள ரோட்டில் நடந்தது. அதற்கு பின் என்ன நடந்தது என்றால் பாட்டிலை எடுத்து மண்டையில் அடித்துவிட்டார்கள். எனது வீட்டிற்கு முன்னால் பாட்டில் கிடையாது என்றாலும் நான் ஏற்கனவே குடித்துவிட்டு பாட்டிலை மறைத்து வைத்திருந்தீர்கள் என்றும் அந்த பாட்டில் தான் கீழே விழுந்து உடைந்து நிதானம் இருந்த என்னை காயப்படுத்தியது என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள ஒரு கட்டிடத்தில் வேலை பார்த்து வந்தார்கள் என்றும் எங்கள் இருகுடும்பத்திற்கும் விரோதம் இருந்த காரணத்தினால் எப்படியாவது எதிரிகளை போலீசில் சிக்க வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டு நீங்கள் இந்த புகாரை கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. 23.06.2021-ம் தேதி காலையில் புகார் கொடுத்தேன். பெரியவர்கள் சமரசம் செய்ய முயற்சி செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகளை போலீஸ் எப்போது கைது செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளை கைது செய்து காவல் நிலையம் சென்ற பிறகும் கூட

பெரியவர்கள் சமரசம் செய்ய முயற்சி செய்தார்கள் என்றால் நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நான் எதிரிகளை கைது செய்தபோது எனது குடும்பத்துடன் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். எதற்காக போனேன் என்றால் சமரசம் செய்ய கூப்பிட்டார்கள் அதற்கு நான் வேண்டாம் என்று சொன்னேன். அதற்காக காவல் நிலையம் சென்றேன். சமரசம் செய்ய குடும்பத்துடன் காவல் நிலையம் சென்றேன் என்றாலும் அதை எனது கட்சிகாரர்கள் தடுத்து நிறுத்தினார்கள் என்றாலும் சரியல்ல. வேண்டுமென்றே முன்விரோதம் காரணமாக தான் இந்த புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.08.01 13:00:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)

கொடைக்கானல்

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம்,**
**கொடைக்கானல்**
**சி.சி.எண்.12 / 2022**
**வழக்கு சாட்சி : PW2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரலேகா | ஜாதி | |
| கணவர் பெயர் | பாலாஜி | தொழில் | ஆசிரியர் |
| கிராமம் | பண்ணைக்காடு | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 52 |
| தேதி | 01.08.2023 | | |

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)**

முதல் விசாரணை:

நான் தற்போது பண்ணைக்காட்டில் குடியிருந்து வருகிறேன். பண்ணைக்காடு கிராமம் ஊரல்பட்டியில் உள்ள தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். **ஆஜர் 1-வது எதிரியைத் தெரியும். 2-வது எதிரியை தெரியும்.** 22.06.2021-ம் தேதி நான் எனது மகள், எனது மகன் ஆகியோர்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருந்தோம். எதிரிகள் எங்கள் வீட்டில் கல்லை துாக்கி எறிந்தார்கள். நான் எதற்கு இவ்வாறு கல்லை துாக்கி எறிகிறீர்கள் என்று கேட்கும்போதே சின்ன பையன் எங்கள் வீட்டு ஜன்னலில் கல்லை எடுத்து எறிந்தான். நான் உள்ளே ஓடி வந்துவிட்டேன். பின்னர் எனது மகன், நான், எனது மகள் ஆகியோர்கள் ஏன் கேட்டில் கல்லை எடுத்து போடுகிறீர்கள் என்று கேட்டோம். அப்போது அவர்கள் பேசிக்கொண்டே நிறைய கற்களை எடுத்து எறிந்தார்கள். பின்னர் கேட் மேல் ஏறி உள்ளே வர முயற்சி செய்தார்கள். பின்னர் உள்ளே வந்து உள்ளே இருந்த பாத்திரங்களை துாக்கி நான்காபக்கமும் துாக்கி எறிந்தார்கள். அப்போது எனது மகனையும் பாத்திரங்களை கொண்டு அடித்தார்கள். பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு ஓடி வந்து ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டுகொண்டு கேட்டின் வெளியே அவர்களை கொண்டு போய் விட்டார்கள். ஆனாலும் அவர்கள் வெளியே போகாமல் கேட்டிற்கு முன்னாலேயே நின்று கொண்டு இருந்தார்கள். எனது கணவர் விசேச வீட்டிற்கு சென்று விட்டு திரும்பி இருசக்கர வாகனத்தில் வந்தபோது பைக்கோடு எனது கணவரை கீழே தள்ளிவிட்டார்கள். அருகில்

இருந்தவர்கள் தூக்கிவிட்டார்கள். வீட்டின் அருகில் இருந்த புதருக்குள் இருந்த பாட்டிலை எடுத்து எனது கணவரின் தலையில் பாரத் ராஜன் அடித்துவிட்டார். நான், எனது மகள் மற்றும் எனது மகன் ஆகியோர்கள் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்தோம். பின்னர் உடனே தலையில் இரத்தம் வருவதை பார்த்து நாங்கள் அவரை பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதல் உதவி சிகிச்சை செய்தார்கள். பின்னர் தையல் போட்டார்கள். 23.06.2021-ம் தேதி தாண்டிக்குடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எதிரிகள் இல்லை. ஆனால் தம்பி பையன்கள் திடீரென்று இப்படி செய்தார்கள். ஏன் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

எதிரிகள் எனக்கு சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். எங்கள் இருகுடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை. சம்பவம் எப்போது நடந்தது என்றால் மதியம் 02.45 மணிக்கு நடந்தது. காயம்பட்ட எனது கணவருக்கு மருத்துவமனையில் என்ன செய்தார்கள் என்றால் காயத்திற்கு தையல் போட்டார்கள். ஸ்கேன் எடுக்கச்சொல்லி பரிந்துரை செய்தார்கள். கானாவிலக்கு சென்று ஸ்கேன் எடுத்து பார்த்துவிடுங்கள் என்று பரிந்துரை செய்தார்கள். கானாவிலக்கு சென்று ஸ்கேன் எடுத்தேனா என்றால் எடுத்துக் கொண்டு வந்து டாக்டரிடம் காட்டினோம். ஸ்கேன் மட்டும் எடுத்தோம் என்றால் ஸ்கேன் மற்றும் சிகிச்சையும் பெற்றோம். வெளியிலேயும் சிகிச்சை எடுத்தோம். வெளியே சிகிச்சை எடுத்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் எனக்கு தெரியவில்லை. எங்கள் இருகுடும்பத்திற்கும் இடையில் சண்டை மனஸ்தாபம் இருந்த காரணத்தினால் தான் எனது கணவர் எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. திடீரென்று தாக்குதல் நடத்திவிட்டார்கள்.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2023.08.01 13:00:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)

கொடைக்கானல்